## பொங்கல் பண்டிகைக்கு 8 முழம் வேட்டிக்கு பதில் 4 முழம் வேட்டி வழங்குவதால்

# நெசவாளர்களுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது!

## சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பில் எஸ்.ஆஸ்டின் பேச்சு!



**சென்னை, செப். 2-**

**பொங்கல் பண்டிகைக்கு 8 முழம் வேட்டிக்கு பதிலாக 4 முழம் வேட்டி வழங்குவதால் நெசவாளர்களுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பில் எஸ்.ஆஸ்டின் பேசினார்.**

பேரவையில் இதுகுறித்து எஸ்.ஆஸ்டின் பேசியதாவது:-

2027 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படும் விலையில்லா வேட்டி-சேலை வழங்கும் திட்ட த்தில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த 8 முழம் வேட்டிக்குப் பதிலாக, 4 முழம் வேட்டி வழங்கப்படும் என்ற புதிய அரசாணையினால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையினை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். அதாவது, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தேன் என்று செல்வார்கள். அதேபோல், இந்த அறிக்கையில் அனைத்து விவரங்களும், அனைத்து பாதிப்புகளும் மறைக்கப்பட்டு, இறுதியில் இரண்டு கருத்துகளை மட்டும் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை, என்று சொல்லியிருக்கிறார். பொதுமக்களிடம் 4 முழ வேட்டியாக மாற்றுவதற்கு கருத்துக் கேட்கப்பட்டதில், பெரும்பாலானவர்கள் 4 முழ வேட்டியையே தேர்வு செய்துள்ளார்கள் என்று இரண்டு கருத்தோடு அமைச்சர் அவர்கள் இதில் முடிக்கிறார்கள். மற்ற விவரங்கள் எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை.

**கஞ்சித்தொட்டி போராட்டம்!**

என்னைப் பொறுத்தவரையில், நெசவாளர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரியும். பத்திரிகைகளில் எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, நேற்றைய முன்தினம் இராஜபாளையம் பகுதியில் இருக்கக்கூடிய புனல்வேலி பகுதியில், பாதிக்கப்பட்ட நெசவாளர்கள் குடும்பத்தினருடன் கஞ்சித் தொட்டி திறந்து போராட்டம் நடத்தியிருக்கின்றார்கள். இதற்கு 4, 5 தினங்களுக்கு முன்பாக இராஜபாளையம் பகுதி, சேத்தூர் பேருந்து நிலையம் முன்பாக, தட்டை ஏந்தி பிச்சை எடுக்கும் போராட்டத்தை நடத்தியிருக்கின்றார்கள். அதேபோல், நெசவாளர்களுடைய கருத்துக் கேட்பு என்று சொல்கிற பொழுது, எந்தவிதமான கருத்துக் கேட்புக் கூட்டமும், எங்கேயும் நடந்ததாக நாங்கள் பார்க்கவில்லை. என்னுடைய நாகர்கோவில் சரகம் பகுதியில் அதிகமாக, 30-க்கும் மேற்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. எங்கேயுமே கருத்து கேட்கப்படவில்லை.

ஆனால், ஒரு சில அதிகாரிகள், ஒரு *format* மட்டும் தயார் செய்து, 8 முழ வேட்டியா 4 முழ வேட்டியா என்று போட்டு, அதில் 4 முழ வேட்டியில் ஒரு *tick* செய்து, 20, 30 பொதுமக்களிடம் *formality*-க்காக கை யெழுத்து வாங்கியதாக தெரிகிறது. எனக்கு தெரிய வருகிற கருத்தை நான் சொல்கிறேன். எனவே, மிகப்பெரிய பாதிப்பு இந்த பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. உங்களுக்குத் தெரியும்.

கருத்து கேட்பு கூட்டம் என்பது ஒரு முறையான அறிவிப்பு கொடுத்து, அந்தப் பயனாளிகளையும், நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினுடைய உறுப்பினர்களையும் அழைத்து வைத்து, கருத்து கேட்டு, ஒரு இரகத்தை புதிதாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், 8 முழ வேட்டியை 4 முழ வேட்டியாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், அங்கு கருத்து கேட்டு, அதில் *majority* ஆக எந்தக் கருத்து ஏற்கப்பட்டதோ, அதை அவர்கள் மாற்றலாம். அது ஒரு அரசாங்கத்தினுடைய உரிமை.

**கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தவில்லை!**

அப்படிப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்படவில்லை. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இரண்டாவது, உங்களுக்கு எல்லாம் தெரியும். இந்த அவையில் நீங்கள் இருந்த காலம் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை. 1983 ஆம் ஆண்டில் தான் அன்றைய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொங்கலுக்கான விலையில்லா வேட்டி சேலைத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதைக் கொண்டு வந்ததன் நோக்கம் என்னவென்று சொன்னால், பயனாளிகளை முன்னிறுத்தி அவர் கொண்டு வரவில்லை. கைத்தறி நெசவாளர்கள், பெடல் தறி நெசவாளர்கள் உள்ளிட்ட நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய் விடுகின்றது. ஆண்டு முழுவதும் அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், நெசவாளர்களுக்காக உருவாக்கப்பட்ட திட்டம் தான் பொங்கலுக்காக வழங்கக்கூடிய, இலவச வேட்டி சேலைத் திட்டம். அந்தத் திட்டத்தை தொடர்ந்து, எங்களுடைய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர், அதற்கு பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சி அதற்கு பின்னர் எங்களுடைய தலைவர் அவர்களுடைய ஆட்சிகளில் எல்லாம் முறையாக நெசவாளர்களுக்கு அந்த ஆண்டு முதல் வேலைவாய்ப்பைக் கொடுத்து, இந்த திட்டத்தை நாங்கள் நடத்திக் கொண்டு வந்தோம். நெசவாளர்கள் இதன்மூலமாக, வேலைவாய்ப்பைப் பெற்று, பயன் பெற்றார்கள். நெசவாளர்கள் அனைவரும் பொதுவாக, கிட்டத்தட்ட 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் தான் நெசவுத் தொழிலில் தங்களை ஈடுபடுத்தி வருகின்றார்கள்.

**8 முழ வேட்டிக்கு அரசாணை!**

வருகின்ற பொங்கலுக்கு வழங்கக்கூடிய வேட்டி சேலையை உற்பத்தி செய்வது என்பது தமிழ்நாடு முழுவதும் உற்பத்தி செய்யவில்லை. சில இடங்களில் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். குறிப்பாக, நாகர்கோவில் சரகம், கடலூர், திருச்செங்கோடு, சேலம் மற்றும் காஞ்சிபுரம் இவ்வாறு 5 சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில்தான் அதிகமாக கைத்தறியும், பெடல் தறியும் வைத்து நெசவுத் தொழில் செய்து, இந்த வேட்டிகளை அவர்களுக்கு வழங்குகின்றார்கள். ஆனால், இப்போது, சமீபத்தில் வருகின்ற 2027 ஆம் ஆண்டு பொங்கலுக்கு வேட்டி சேலை வழங்க வேண்டும். வேட்டி சேலை வழங்குவதற்கு, எங்களுடைய ஆட்சிக் காலத்தில், கடந்த 18-2-2026 ஆம் நாளன்று 8 முழ வேட்டியை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தி ஆணையை அரசாங்கம் அவர்களுக்கு வழங்கிவிட்டது.

உற்பத்தி ஆணையை வழங்கியது மட்டுமல்ல, அதற்கான பாகு நூல், ஊடை நூல் 4 மாதங்களுக்கான கூலி முன்பணத்தினுடைய பங்குத் தொகை, இவையெல்லாம் அந்த சங்கங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டு, அவர்கள் நூலை கொள்முதல் செய்து, நெசவாளர்கள் தங்களுடைய பணியைத் தொடங்கிவிட்டு, கிட்டத்தட்ட 3, 4 மாதங்களாக பணி செய்து—நாகர்கோவில் சரகத்தில் மட்டும். நாகர்கோவில் சரகத்தில் மட்டும் கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் மதிப்பிலான வேட்டிகள் இன்றைக்கு தேக்க நிலையில் இருக்கின்றன.

5 சரகத்தையும் சேர்த்தால் கிட்டத்தட்ட சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பிலான வேட்டிகள் நெய்யப்பட்டு, தயார் நிலையில், இருப்பில் (*stock*), இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அதை இந்த அரசு கவனத்தில் கொள்ளவில்லை. திடீரென்று இப்போது வந்து ஒரு முடிவு எடுக்கிறார்கள். 1-7-2026-ல் ஒரு புது அரசாணை, அரசாணை எண் 106, ஒரு அரசாணையை அறிவித்து, 8 முழ வேட்டி என்பது 4 முழ வேட்டியாக மாற்றப்பட்டு, புதிய ரகமாக மாற்றப்பட்டு, அது சலவை செய்யப்பட்டு, வெள்ளைக் நிறத்தில் சலவை செய்யப்பட்டு வழங்கப்படும் என்று ஒரு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த அறிவிப்பினால் மிகப் பெரிய பாதிப்பு அந்த தறி நெய்யக்கூடிய நெசவாளிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

என்ன பாதிப்பு என்று சொன்னால் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு போனதா என்று தெரியவில்லை. என்ன பாதிப்பு என்று சொன்னால், இப்போது கொடுத்திருக்கின்ற அரசாணைப்படியான வேட்டிகளை ஏற்கெனவே இருக்கக்கூடிய தறியில் உற்பத்தி செய்ய முடியாது. அதனுடைய அளவு வித்தியாசம் 60 *number* நூல் இருப்பதை இவர்கள் 40 *number* ஆக மாற்றியிருக்கிறார்கள். 72 *inch* அச்சு என்பதை, 68 *inch* ஆக மாற்றியிருக்கிறார்கள். ஆக, அதை *alteration* செய்ய வேண்டும், *modify* செய்ய வேண்டும். அந்தத் தறியை *modify* செய்தால் தான், இந்த அரசாணைப்படியான வேட்டியை அவர்களால் உற்பத்தி செய்ய முடியும். ஏனென்றால் உற்பத்தி செய்ய முடியவில்லை. ஆக என்ன காரணம். யாரும், பயனாளிகள் யாரும் தாங்களாக முன்வந்து எங்களுக்கு நான்கு முழம் வேட்டியைக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. எந்தக் கருத்துக் கூட்டமும் நாம் நடத்தவில்லை. எந்த விவசாயி களுக்கும் இதில், எந்த நெசவாளர்களுக்கும் இதில் எந்தப் பாதிப்பும் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் 7 மாதங்கள் கழித்து, இன்னும் பொங்கலுக்கு 4 மாதங்கள்தான் இருக்கின்றன. இதற்குள்ளாக இத்தனை வேட்டி, சேலைகளையும் உற்பத்தி செய்தாக வேண்டும். 7 மாதங்கள் கழித்து ஒரு புதிய அரசாணை வெளியிடுவதனுடைய நோக்கம் என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி.

அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். தரமான வேட்டி வழங்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இதனை மாற்றியிருக்கிறோம் என்று சொன்னார்கள்.

நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த எட்டு முழம் வேட்டிக்கும், நான்கு முழம் வேட்டிக்கும், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய, பயன்படுத்தக்கூடிய நூலின் தன்மையைப் பார்க்கின்றபோது, நெசவாளர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், நான்கு முழம் வேட்டி அதைவிட தரம் குறைவான வேட்டி, விலை குறைவான மதிப்புள்ள வேட்டிதான் இப்போது அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள் என்று சொல்கிறார்கள்.

**வாழ்வாதாரத்தில் மண் அள்ளிப் போடும் த.வெ.க. அரசு!**

ஆகவே, தரம் குறைவான வேட்டியை, கூலியையும் குறைவாகக் கொடுத்து வாங்குவதற்கு என்ன காரணம்? அதுதான் என்னுடைய கேள்வி. இரண்டாவதாக, தேக்கமடைந்த வற்றையெல்லாம் நாங்கள் வாங்கிக்கொள்கிறோம் என்று அவர் சொன்னார். ஏழு மாதங்கள் கடந்துவிட்டது; இன்னும் சுமார் 4 மாதங்களே இருக்கின்றன. என்னுடைய கேள்வி என்னவென்றால், இந்த அரசாணையை தற்காலிகமாக நீங்கள் இரத்து செய்யுங்கள். இரத்து செய்துவிட்டு, ஏற்கெனவே உற்பத்தியாணை கொடுத்திருக்கிறீர்கள். 4 மாதங்கள் வேலை ஆட்கள் இருக்கிறார்கள். மீண்டும் ஓர் உற்பத்தியாணை கொடுத்து, இந்த எட்டு முழம் வேட்டியை இந்த ஆண்டிற்காவது நடைமுறைப்படுத்துங்கள். தேக்கமடைந்த வேட்டிகள் அனைத்தையும் நீங்கள் வாங்க வில்லையென்று சொன்னால், அன்றாட கூலிகளான அவர்கள் வட்டிக்கு பணம் வாங்கி, நூல் வாங்கி, நெய்து இன்றைக்கு வைத்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ரூ.250, ரூ.300 தான் அவர்களுக்கு கூலி கிடைக்கின்றது. இதுவே, இன்றைக்கு அவர்களுக்குக் கேள்விக்குறியாகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நோக்கமே சிதைந்து போய்விடும். எந்த நோக்கத்திற்காக இந்தத் திட்டத்தை அன்றைக்கு உருவாக்கினார்களோ, கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தில் மண் அள்ளி போடக்கூடிய அளவில் இந்தத் திட்டம் சிதைந்து போய்விடும். எனவே, இந்த ஆண்டு நீங்கள் மறுபரிசீலனை செய்து, இந்த அரசாணையை இரத்து செய்தால், இந்த ஓராண்டு மட்டும் கொண்டு வந்தால், உங்களுக்கு *easy* ஆக இருக்கும்.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் பேசினார்.

---

### கோவை மாவட்ட முன்னாள் செயலாளர்

### பெரியவர் பி.ஏ.சாமிநாதன் மனைவி

## திருமதி. சம்பூரணம் சாமிநாதன் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.2-

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நினைவில் வாழும் பெரியவர் பி.ஏ.சாமிநாதன் அவர்களின் மனைவியும், புன்செய்ப் புளியம்பட்டி முன்னாள் நகர் மன்றத் தலைவர் பி.எஸ்.அன்பு அவர்களின் தாயாருமான திருமதி சம்பூரணம் சாமிநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (1.9.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

---

### தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கழக மூத்த முன்னோடி

# சங்கரதாஸ் - பொ.சிவபத்மநாதன் நேரில் சந்திப்பு!

## கழக இருவண்ண வேட்டி வழங்கி வாழ்த்துப் பெற்றார்!

தென்காசி, செப். 3 -

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அம்பேத்கர் நகரில் வசித்து வரும் கழகத்தின் மீதும் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் மீதும் மிகுந்த பற்றும், தொடர்ந்து கழகத்தின் அனைத்து செயல்பாடுகளுக்கும்,கழக தலைவர் அவர்கள் அறிவிக்கும் அனைத்து உத்தரவுகளுக்கும் உறுதுணையாக இருந்து தொடர்ந்து செயல்பட்டு வரும் கழக மூத்த முன்னோடி சங்கரதாஸ் (வயது 92 ) இவர் சங்கரன்கோவில் ரயில் நிலையத்தில் இருந்து கொண்டு தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ. சிவபத்ம நாதனை கைபேசியில் தொடர்பு கொண்டு சந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் சங்கரன்கோவில் கணபதி மகாலில் கழக முன்னோடி பாலமுருகன் அவர்கள் இல்ல திருமண விழாவில் கலந்து கொள்வதற்காக வந்து கொண்டிருக்கிறேன். நான் உங்கள் வீட்டிற்கு வருகிறேன் என்று கூறியுள்ளார்.

அதற்கு கழக மூத்த முன்னோடி சங்கரதாஸ் உங்களை சந்திக்க கணபதி மகாலுக்கு நான் வருகிறேன் என்று கைபேசியில் தெரிவித்துள்ளார்.

பின்னர் கணபதி திருமண மஹாலில் காத்துக் கொண்டிருந்த கழக மூத்த முன்னோடி சங்கரதாஸை “கழகத்தின் வேர்களை காப்போம்” என்ற உன்னதமான

நோக்கத்தின் அடிப்படையில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் அவரை நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்து வாழ்த்து பெற்று கழக இருவண்ண வேட்டியை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் இல.சரவணன்,பொதுக்குழு உறுப்பினர்கள் மாரிசாமி, தேவா என்ற தேவதாஸ்,முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளர்,குமார் மாவட்ட பிரதிநிதி அன்பழகன்,வார்டு செயலாளர் பெர்னாண்டஸ்,நகர தொண்டரணி துணை அமைப்பாளர் ப. அருணாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அவரிடம் உரையாடிய போது அவர் சிவபத்மநாதனிடம் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் சட்டமன்றத்தில் பேசிய பேச்சு முரசொலியில் இரண்டு பக்கம் வந்திருக்கிறது அதை படித்தீர்களா? என்று கேட்டார் நான் நேற்றே பார்த்து விட்டேன் படித்து விட்டேன் என்று சொன்னார்.

கழக மூத்த முன்னோடி சங்கரதாஸ் அவர்கள் (92 வயது ) கழகத் தலைவர் அவர்களோடு நெருக்கமாக பழகியவர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் குடும்பத்தோடும் நெருக்கமானவர் அவருக்கு சொந்த ஊர் சங்கரன்கோவில் ஆனால் அவர் வால்பாறை சென்று தேயிலை தோட்ட தொழிலாளியாக அவரும் அவருடைய துணைவியார் லட்சுமி அவர்களும் பணி புரிந்துள்ளார்கள்

தேயிலை தோட்ட தொழிலாளியாக இருக்கும் பொழுது கிளைக் கழகச் செயலாளராக வார்டு செயலாளராக மாவட்ட பிரதிநிதியாக வால்பாறை ஒன்றிய அவைத் தலைவராக இப்படி பல்வேறு பொறுப்புகளை வகித்து தேயிலை தோட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திலும் பொறுப்பு வகித்தவர்.

அவருக்கு 12 குழந்தைகள் இதில் 7 பெண்கள்,5 ஆண்கள் உள்ளனர். இவர்களில் 2 பேர்கள் நீதிபதி, ஒருவர் சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நீதிபதியாக பணிபுரிந்து வருகிறார் ஒருவர் ஓய்வு பெற்று விட்டார்.

அதேபோல் அவருடைய பெண்குழந்தைகள் அனைவரும் ஆசிரியராகவும்,அரசு மருத்துவமனையில் செவிலியர் களாக பணிபுரிந்து வருகிறார்கள்.

பின்னர் சிவபத்மநாதன் கூறுகையில் இன்றைக்கும் கழக வேட்டி, முரசொலி பத்திரிக்கையோடு இருப்பவர் ஐயா சங்கரதாஸ் அவர்கள். நான் மாவட்ட செயலாளராக இருந்த போது 2022 ஆம் ஆண்டு அவருடைய இல்லத்தில் சென்று நானும் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜாவும் மரக்கன்று நட்டோம்.

நான்நட்ட தென்னங்கன்று தற்போது அந்த மரக்கன்று வளர்ந்து தேங்காய் காய்க்கும் பருவத்தை அடைந்துள்ளது.

ஒவ்வொரு மாநாட்டிற்கும் முப்பெரும் விழா நிகழ்ச்சிக்கும் குடும்பத்தோடு இன்று வரை சென்று வருகிறார்.அந்த அளவிற்கு கழகப் பற்று கொண்டவர்கள்

தற்போது சங்கரன்கோவில் அம்பேத்கர் நகரில் வசித்து வருகிறார்.

தொடர்ந்து கடுகளவு கூட கழகத்தின் மீது கொண்டுள்ள பற்று குறையாமல் வாழ்ந்து வரும் குடும்பமாக அந்த குடும்பம் திகழ்ந்து வருகிறது.

தற்போது 92 வயது நிரம்பியுள்ள அய்யா சங்கரதாஸ் லட்சுமி தம்பதியருக்கு வருகிற 13ஆம் தேதி திருமண நாள் கழகத் தோழர்கள் அனைவரும் வாழ்த்துவோம் என்று கூறினார்.

---

## அரியலூர் மாவட்டம் - ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளராக பணிபுரிந்த தன.சேகர் அவர்கள் தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, **வீ.சிவா (எ) சிவகுருநாதன்** (பிலிச்சுக்குழி, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்) அவர்கள் ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 02.09.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### மாற்றுத்திறனாளிகள் மானிய கோரிக்கையில் ஏமாற்றம்!

# மாற்றுத்திறனாளிகளுக்கான ஆக்கப்பூர்வமான திட்டங்கள் ஏதுமில்லை !

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவர் ரெ.தங்கம் கண்டனம்!



சென்னை, செப். 3 -

மாற்றுத்திறனாளிகள் மானிய கோரிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் ஏதும் அறிவிக்கவில்லை என மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறளிகள் முன்னேற் சங்க மாநிலத் தலைவர் ரெ. தங்கம் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்!

அவரது அறிக்கை வருமாறு:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலம் தொட்டு முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் முதலமைச்சராக பொறுப்பு வகித்த நாள் வரை மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு ஏராளமான திட்டங்களை மாற்றுத்திறனாளிக்கு வாரி வழங்கி அவர்களின் கண்ணீரை துடைத்தனர்.

ஆனால், புதிதாக பொறுப்பேற்ற முதலமைச்சர் ஜோசப் விஜய் சட்ட சபையில், மாற்றுத்திறனாளிக்கான மானிய கோரிக்கையில் நீண்ட நாள் கோரிக்கையான மாதாந்திர உதவித் தொகை ரூ.5000/ உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்ற வில்லை என்பதை வண்மையாக கண்டிக்கின்றோம்.

கீழ்க்கண்ட கோரிக்கைகளை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களை கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட ஒட்டுமொத்த மாற்றுத் திறனாளிகள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

கோரிக்கை 1.

அரசுத் துறையில் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களின் உடல் உபாதைகள் காரணமாக இயற்கை சீற்றங்களால் தொடர் அடை மழை, புயல் வெள்ளம் மற்றும் அக்னி வெயில் உள்ளிட்ட கடும் பாதிப்புகளின் போது மாற்றுத்திற னாளிகள் தங்களது இணைப்புச் சக்கர வாகனம் மற்றும் பேருந்துகளில் ஏறி இறங்கி அலுவலகம் சென்று வர மிகவும் அவதிப்படுகின்றனர். இதனால் இயற்கை சீற்ற ங்களால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்க்கும் விதமாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள 12 நாட்கள் (CL) தற்செயல் விடுப்புடன் சேர்த்து கூடுதலாக 15 நாட்கள் (12+15=27) (27 CL) நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கிடவும்.

கோரிக்கை 2 :

மாற்றுத்திறனாளிகள் அரசுப் பணியில் சேர அரசு விதிகளின்படி 10 ஆண்டுகள் வயது தளர்வு ( அரசு பணியில் சேர 45 வயது வரை) வழங்கப்படுகிறது. இதனால் பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் வயது சலுகை காரணமாக, மாற்றுத்திறனாளிகள் காலம் கடந்து 47, 47, 48 வயதுகளில் அரசு பணியில் சேரும்போது அவர்களின் பணிக்காலம் சுமார் 13 ஆண்டுகள் மட்டுமே பணியாற்றக்கூடிய சூழல் ஏற்படுகிறது.

இதனால், அவர்களுக்கு ஓய்வூதியம் பங்களிப்பை கணக்கிடும்போது மிகவும் அதிக பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மாற்றுத்திறனாளிகள் அரசு துறைகளில் 15 ஆண்டுகள் பணிபுரிந்தால் அவர்களுக்கு முழு ஓய்வூதிய பங்களிப்பை வழங்கிட வேண்டும்,

மேலும் அவர்களுக்கு குறுகிய பணி காலம் இருப்பதால், அவர்களின் குடும்ப நலன் கருதி பணி ஓய்வு பெறும் வயதினை 65ஆக நிர்ணயம் செய்து உயர்த்த வேண்டும்.

கோரிக்கை 3 :

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை ரூ.5000/_ ஆக உயர்த்தி வழங்க மானியக் கோரிக்கையில் வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது .

கோரிக்கை 4:

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக வீடு ஒதுக்கீடு செய்து வழங்கிட வேண்டும், மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் வீடுகளுக்கு எளிதாக அணுக கூடிய கட்டமைப்பு ஏற்படுத்தி உறுதி செய்ய மானிய கோரிக்கையில் வலியுறுத்த வேண்டுகிறேன். (கைப்பிடியிடும் கூடிய சாய் தளம் டாட் டைல்ஸ் அமைத்தல்)

கோரிக்கை 5:

மீனவர்களின் விசைப் பாடுகளுக்கு அரசு மானிய விலையில் டீசல், பெட்ரோல் வழங்குவது போல இணைப்பு சக்கர ஸ்கூட்டி மற்றும் கார்கள் பயன்படுத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்கிட வலியுறுத்துகிறோம்.

கோரிக்கை 7 .

தமிழ்நாடு ஹோட்டல்களில் மாற்றுத்திறனாளிகள் தங்கிட தற்போது 25% சதவீதம் கட்டண சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

இதனை GST உள்ளிட்ட வரிகள் கணக்கிடும்போது சராசரி கட்டணத்திற்கு சமமாக கூடுதல் கட்டண செலுத்த வேண்டி உள்ளது. இதனால் இவர்களுக்கு 75% கட்டண சலுகை வழங்கிட வேண்டுகிறோம்.

கோரிக்கை 8: ( மாற்றுத்திறனாளிகளின் மகள் / மகன்)

அரசு பணிகளில் இட ஒதுக்கீடு, பொறியியல் படிப்பு,மருத்துவ படிப்பு மற்றும் பள்ளி, கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு வழங்கிட கேட்டுக்கொள்கிறோம்.

கோரிக்கை 9.

இந்து சமய அறநிலைக்கு உட்பட்ட பழனி பாலதண்டாயுதபாணி கோயில் திருச்செந்தூர் முருகன் கோயில் உள்ளிட்ட அறநிலைக்கு துறைக்கு உட்பட்ட பல்வேறு கோயில்களில் மாற்றுத்திறனாளிகள் தரிசனத்திற்கு செல்லும் போது கோவிலுக்கு சொந்தமான விடுதிகளில் முற்றிலும் இலவசமாக தங்கி தரிசனம் செய்ய சட்டசபையில் வலியுறுத்த வேண்டுகிறோம்.

கோரிக்கை 10 :

வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ஆணை மூலமாகவும் தேர்வு செய்யப்பட்டு,

அரசு பணிகளில் கடந்த பல ஆண்டு காலமாக தங்களது வயது மூப்பினை இழந்து, தொகுப்பு ஊதியம் அடிப்படையிலும், தினக்கூலி அடிப்படையிலும் பணியாற்றி வரும் மாற்றுத்திறனாளிகளை அரசாணை நிலை எண் 151 படி பணி நியமனச் செய்ய வேண்டுகிறோம்.

மேற்கண்ட கோரிக்கைகளை முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் நிறைவேற்றுமாறு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.